www.padippakam.com


# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2010
வைகாசி 16
றஜப் 3
புதன் (30-5-1979)
நிறுவியது 1947)
புத்தகம் 32
இதழ் 104
விலை சதம் 50


## அமெரிக்க 'மசசூசெட்' பாராளுமன்றத்தைப் பின்பற்றி

# ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து

# தமிழ் நாடு சட்டமன்றத்திலும்

# தீர்மானம் கொண்டுவர முயற்சி!

மனிதாபிமான மற்ற முறையில் பல்வேறு அநீதிகளுக்குள்ளாக்கப்படும் ஈழத்தமிழர்களுக்குநியாயம் பெற்றுக்கொடுப்



பதற்கு அமெரிக்க ஜனாதிபதியும், அமெரிக்க அரசும் தமது செல்வாக்கையும்அதிகாரத்தையும் பயன்படுத்த வேண்டுமென்று கோரும் தீர்மானத்தை அமெரிக்க மாகாண அரசுகளில் ஒன்றான 'மசசூசெட்' பாராளுமன்றம் அண்மையில் ஏகமனதாக நிறைவேற்றி, அதை 'சிறிலங்கா' ஜனாதிபதிக்கும், அமெரிக்க ஜனாதிபதிக்கும் அனுப்பிவைத்ததுடன் தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்களையும் நேரடியாக அழைத்து அத்தீர்மானத்தின் ஒருபிரதியை சம்பிரதாய பூர்வமாக நேரடியாகக் கையளித்ததல்லவா?



இதேபோல—அமெரிக்காவின் 'மசசூசெட்' தீர்மானத்தை பின்பற்றி, ஈழத் தமிழர் பிரச்சினையின்பால் இந்தியப் பிரதமரையும். இந்திய அரசாங்கத்தின் கவனத்தையும் திருப்பும் நோக்குடனும், ஈழத்தமிழர்களின் நீதிநியாயமான போராட்டத்துக்கு ஆதரவாக தமிழ் நாட்டின் நாலரைக்கோடி மக்களின் ஆதரவு உண்டு என்பதை இலங்கை அரசுக்கு எடுத்துணர்த்தும் கருத்துடனும், ஈழத்தமிழர் பிரச்சினைபற்றிய தீர்மானமொன்றை தமிழ்நாடுசட்டமன்றத்தின் இருசபைகளிலும் கொண்டுவரவும் கட்சி அரசியலுக்கப் பாற்பட்ட முறையில் அதை ஏகமனதாக நிறைவேற்றி இந்தியப் பிரதமருக்கும்? "சிறீலங்கா" ஜனாதிபதிக்கும் அனுப்பிவைக்கவும் தமிழ் நாட்டிலுள்ள ஈழத்தமிழர்களின் நேச சக்திகள் இப்போது முயற்சியெடுத்து வருகின்றன.

எங்கோ இருக்கும் அமெரிக்க நாட்டு மசசூசெட் மாகாண பாராளுமன்றமே மனிதாபிமானத்தின் அடிப்படையில்— ஈழத்தமிழர்களின்நியாயமானபோராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றிய பின்னரும், அருகே





தமிழ் நாட்டில் மூன்று இலட்சம் பிரதிகள் விற்பனையாகும் தினத்தந்தி (12-5-79)யில் ஈழத்தமிழர் சார்பாகப் பிரிவினைக் கோரிக்கை பற்றி வெளியிடப்பட்டிருந்த கருத்துப் படம் இது.



யுள்ள தமிழ்நாடு இப்பிரச்சினைமீது தூங்கிக் கொண்டிருப்பது உலகத்தமிழ்ச் சமுதாயத்துக்கே பெருங்கேடு என்று இவர்கள் கருதுகின்றனர்.

தமிழ் நாட்டில் அரசியல் கட்சி வேறுபாடின்றி அனைத்துக் கட்சியினருமே ஈழத்தமிழர் உரிமைக் கோரிக்கையின் பால் ஆர்வமும் அபிமானமும் கொண்டுள்ளனர். தமிழக ஆளுங் கட்சியான அண்ணா திமுக தலைவர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர், பொதுச்செய

—4-ம் பக்கம் பார்க்க

## மட்டுநகரில் அடிபடும் ரூபா 50,000 பெறுமதியான கேள்வி!

அண்மையில் அரசியலில் மிகப்பெரிய குத்துக்கரணமடித்த கிழக்குமாகாண அரசியல் வாதியொருவருக்கு காத்தான் குடியில் அளிக்கப்பட்ட வரவேற்பின் பின்னணியென்ன?

இந்தவரவேற்புக்கும் மட்டக்களப்புமாநகர புனரமைப்பு வேலைகள் தாமதப்படுவதற்கும் சம்பந்தம் உண்டா?

மாநகரை விஸ்தரிக்கும் போது பல கொழுத்த முதலாளிகளின் கடைகளும் இடிபடக் கூடிய சூழ்நிலை இருந்ததா?

இதிலிருந்து தப்புவதற்காக குறித்த முதலாளிகள் பலரும்சேர்ந்து அரசியல்வாதியை தனியாகச் சந்தித்தார்களா?

இந்தச் சந்திப்பின் பின்னர், புனரமைப்பு வேலைகள் தற்காலிகமாக ஒத்திவைக்கப் படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டதா?

இந்த மகிழ்ச்சியின் எதிரொலியாகத்தான் காத்தான் குடியில் குறித்த அரசியல்வாதிக்கு முதலாளிகளால் வரவேற்பு அளிக்கப்பட்டதா?

இதுவே மட்டக்களப்பு மக்களின் மனதை அலைக்கழிக்கும் ரூபா ஐம்பதினாயிரம் பெறுமதியான கேள்வி மர்மம்!

## "அனு செனிவிரத்தினவைவிட சேவை மூப்புடையவர் ருத்திராராஜசிங்கமே

ஐ.ஜி.பி.யாக தார்மீக அரசாங்கத்தால் அண்மையில் பதவி உயர்த்தப்பட்ட திரு. அனு செனிவிரத்தினவை விட. பொலிஸ் சேவையில் மூப்பு (SENIORITY) உடையவர் உருத்திரா ராஜசிங்கமே என்பதை சன்சோனி ஆணைக்குழுமுன் சாட்சியமளித்த முன்னாள் ஐ.ஜி.பி. திரு. ஸ்டான்லி சேனநாயகா ஒப்புக்கொண்டுள்ளார். அவர் கூறியிருப்பதாவது:—

"திரு. உருத்திரா ராஜசிங்கம் எனக்குக்கீழ் நேரடியாக பிரதிப்பொலீஸ் மாஅதிபராக (D.I.G) இருந்தார்: அவருடைய பொலீஸ்சேவை அறிக்கைகள் மிகவும் திருப்தியானவை. திரு. அனு. செனிவிரத்தினவின் சேவை மூப்புக்காலம் திரு. உருத்திரா ராஜசிங்கத்தினுடையதைவிடக்குறைவானதே பிரதிப் பொலீஸ் மாஅதிபர் திரு. ஜோசெப்பும் திரு. அனு செனிவிரத்தினவும் ஒரே காலத்தில்தான் பொலீஸ் சேவையில் சேர்ந்தார்கள் என்று நினைக்கிறேன்".

www.padippakam.com



# தமிழீழத்தின் உள்ளூராட்சிமன்றங்களில் தமிழ்மட்டுமே இனி அரசோச்சவேண்டும்!

## கூட்டணி நிர்வாகத்தின் சீரிய கடமைகள்

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் ஈழத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி அமோக வெற்றியை ஈட்டியுள்ளது. வல்வெட்டித்துறைவாழ் மானத்தமிழர்கட்கு மன்னார் எல்லைப்புற மாவட்ட மக்கள் தமது சிறப்பான நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகிறார்கள்' அதேசமயம் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை உள்ளூராட்சி மன்றுகளில் ஐ. தே. க. ஓரளவு வாக்குகளைப் பெற்றுள்ளதை இப்பகுதி மக்கள் கவலையுடன் நோக்குகிறார்கள். இந்நிலையை அவதானித்து எதிர்காலத்தில் அனைத்து வாக்குகளும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே கிடைக்கத்தக்கதாக புதிய உள்ளூராட்சி மன்ற நிருவாகிகள் தமது தூய்மையான நிருவாகத்தை நடாத்த வேண்டும்,

உள்ளூராட்சி மன்றுகளின் நிருவாகம் முழுக்க முழுக்க தமிழ்மொழியில்மட்டுமே நடைபெறல் வேண்டும். இதற்கு மேற்படியாக புதிதாகத் தெரிவுபெற்ற தமிழ்ஈழ உள்ளூராட்சி மன்றுகளின் உறுப்பினர்கள் தமிழில் தங்கள் கையொப்பங்களை வைக்க வேண்டும், மாநகரசபையோ. அல்லது நகரசபையோ தமது அனைத்துத் தொடர்புகளையும் தமிழில் வைக்க வேண்டும். இதுவரை காலமும் மாற்றுக் கட்சிகளின் கையில் சிக்கியிருந்த யாழ் மாநகர நிருவாகம். தற்போது திறமைபெற்ற சட்டத்தரணி இ. விசுவநாதன் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் வந்துள்ளது, எனவே தமிழ் மொழியில் நிருவாகம் நடைபெற எவ்வித தடையுமில்லை. முன்பிருந்த நிருவாகங்கள் எல்லாம் தமிழில் செய்வோம் என்று தீர்மானம் நிறைவேற்றிவிட்டு, செயலளவில் ஆங்கிலத்தையே கட்டியணைத்துக்கொண்டிருந்தன: எனவே இனிமேலாவது ''ஆங்கிலத்துக்கு விடைகொடுப்போம்; அன்னைத் தமிழை வரவேற்போம்'' என்ற நிலையை உள்ளூராட்சி மன்றுகள் ஏற்படுத்த வேண்டும், (இந்நிலை வராவிட்டால் தமிழ் இளைஞர்கள் இம் மன்றங்கட்கு எதிராக நிச்சயம் அறப்போராட்டம் நடாத்துவார்கள்)

தூய்மையான ஊழலற்ற நிருவாகம் நடைபெறும்படி இவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். முன்பு யாழ் மாநகரில் அடிக்கடி நகர முதல்வர்களை மாற்றிக் கொண்டிருந்தார்கள், இனிமேல் இந்நிலை இருக்காது. எனவே தமது கடமைகளை எவ்வித பரபரப்போ பதட்டமோ இல்லாமல் ஆற்ற முடியும்: பிராந்திய சபைகட்கான (பட்டினசபை கிராமசபை) உள்ளூராட்சித்தேர்தல்களும் விரைவில் நடைபெறவிருக்கின்றன, மக்கள் மாநகர, நகரசபை நிருவாகங்கள் எப்படி நடக்கின்றன என்பதை அவதானித்தே பிராந்திய சபைகளில் தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள்:

எல்லாவற்றுக்குமேலாக சுன்னாகம் திரு. ஆசீர்வாதம் ஹென்றி அவர்கள் யாழ் தேர்தல் ஆதரவு திரட்டும் கூட்டத்தில் பேசியதற்கு அமைவாக ''தமிழ் ஈழத் தேசிய மன்றம்'' அமைக்க தமிழ்ஈழ உள்ளூராட்சி மன்றுகள் விரைவில் முன்வரல்வேண்டும், தமிழ்ஈழத்தில் நிருவாகம் எப்படிச் சிறப்பாக அமையும் என்பதை இவர்கள் தம் நிருவாகத்தின் மூலம் மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும்.

— வீ. தமிழ்த்தாசன்

## மகளிர் பேரவை உறுப்பினர்களின் தேர்தல்பணி

19.5.79ல் நடைபெற்ற யாழ் மாநகராட்சித் தேர்தலின் போதும் அதற்கு முன்பும் தேர்தலில் கூட்டணி வெற்றிக்காகபணியாற்றிய வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ் மகளிர் பேரவை உறுப்பினர்களின் விபரம் வருமாறு;—

செல்விகள் அ. சரஸ்வதி' ச. ஞானேஸ்வரி ஆ. கலாவல்லி, எ. லோகநாயகி (பண்ணாகம்) ப. வாசுகி, கை. நளாயினி (சித்தங்கேணி) பொ. வேதவல்லி, க. காந்திமதி. க: வனஜா. ஆ. செல்வரத்தினம், க. சர்வேஸ்வரி. க. வனிதாதேவி, ந. தேவரேணுகா ச. பேரின்பநாயகி (பொன்னாலை)

# "கடவுளையே வணங்காதவன் தலைவர் அமிர்தலிங்கத்தின் காலைத்தொட்டு வணங்கினேன்"

## தமிழ் நாட்டிலிருந்து ஓர் உணர்ச்சிக் கடிதம்!

கடந்த 26.3.79 அன்று எமது கடைக்கு மிகஅருகில் திரு. அமிர் அவர்கள் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றார் என்ற செய்திதேனாக இனித்தது, உடனே வாழ்த்துக் கவிதைகளை எழுதி அதை அச்சாக மாற்றிக் கையில் வைத்துக் கொண்டோம், கூட்டம் நடந்த விக்டோரியா நகர மண்டப நுழைவாயில் அருகில் நின்று நானும் எனது நண்பர்களும் அச்சடித்த கவிதைப் பிரசுரங்களைக் கூட்டத்தில் கலந்து கொள்கின்றவருக்கு ஒவ்வொன்றாக வழங்கினோம், சிறிதுநேரத்தில் பிரதிகள் தீர்ந்துபோயிற்று (இதிலிருந்து கூட்டத்திற் கலந்து கொண்டவர்களைக் கணக்குப்போட்டுக் கொள்ளலாம்.)

சரியாக 8மணிக்கு திரு. அமிர்அவர்கள் வந்தார், ''தமிழீழத்தை அடைந்தே திருவோம்.'' ''மலரும் ஈழப்பிரதமர்வாழ்க'' என்ற முழக்கத்தை என்வாயிலிருந்து துவக்கினேன். பிறகு கூடியிருந்தவர் எல்லோரும் முழங்கினர் (கட்டிடம் இடிந்து விழுமோ என்று அஞ்சினேன்) அனைத்தையும் புன்முறுவல் பூத்து ஏற்றுக் கொண்டார்.

கூட்டம் ஆரம்பமானது, ஒவ்வோர் அமைப்பின் சார்பாக ஒருவர் பேசினார், செல்வபுரம் தி.மு.க. மாணவர்கள் சார்பாக நான் அச்சடித்த கவிதையைப் படித்தேன். படித்தபின் அமிர் அவர்களின் திருக்கரங்களில் ஒன்றும் அவரது துணைவியார் திருக்கரங்களுக்கு ஒன்றும் ஈந்தேன். கல்லாய் நிற்கும் கடவுளின் காலைத் தொட்டுக் கும்பிடுவதைக் காட்டிலும் (திட்டாதீர், நான் நாத்திகன்,) கல்லடி, சொல்லடி பட்டு நமக்காக உழைக்கும் தலைவர் அமிர் காலைக் கும்பிடுவது மேல் எனக்கருதி அவர்காலில் வீழ்ந்து வணங்கினேன். அவர் ஆசீர்வதித்தார். பிறகு எனது டயரியை அவரிடம் கொடுத்து அவரது கையெழுத்தைப் பத்திரப்படுத்திக் கொண்டேன்;

சுருங்கச் சொன்னால்அந்த நாட்கள் எனது வாழ்வின் மறக்க முடியாத வசந்த நாட்கள்.

உணர்ச்சிகரமான விழாவில் கலந்து. கொள்கிறோம் என்ற பூரிப்பு தமிழீழப் பிரதமர் அருகில் இருக்கிறோம் என்கிற ஆர்ப்பரிப்பு அவரது பேச்சைக் கேட்கப் போகிறோம் என்கின்றமகிழ்ச்சி சந்திக்க முடியாத ஒரு தலைவரிடம் பேசினோம் என்கின்ற சந்தோசம் அத்தனையும் அவர் ஈழத்தமிழர்படும் துன்பத்தை எடுத்துக்கூறும் போது, உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் நிலையை விளக்கிய போதும் தமிழர் படும் அவலங்களை அறிவித்த போதும் தவிடு பொடியாகிப் போனது.

எமது இதயத்தில் இரத்தம் வழிந்தது, சிங்களவரின் செருக்கடக்க எங்கள் நரம்பு துடித்தது, பூரிப்புடன் கலந்து கொண்டநெஞ்சம் புண்பட்டது போலாகியது. அன்றும் அடுத்த நாளும் அவர் பின்னாலேயே—அவர் போகுமிடங்களுக்கெல்லாம் போய் அவர் பேச்சைக் கேட்டு புண்பட்ட நெஞ்சத்தைப் பண்படுத்திக் கொண்டோம்.

—கோவை புகழேந்தி.

# தமிழினம் அழிக்கப்படுகின்ற நிலையிலும் ஏன் இந்த ஈனத்தனமான சாதிவெறி?

## கைதடிநிகழ்ச்சி தமிழனின்மனச்சாட்சிக்கோர் சவுக்கடி!

கைதடி கிழக்கு பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா பாதியில் நிறுத்தப்பட்டது. எழுந்தருளிஉலாவந்த பிள்ளையார், தேரில் இருந்து இறக்கப்பட்டு வசந்தமண்டபத்திற்கு மீள அழைத்துச் செல்லப்பட்டார். மருத்துவர்கள் பொறியியலாளர்கள் ஆசிரியர்கள், தத்துவஞானி கள்யோகர் சுவாமியின் அடியார்கள், நிர்வாகசேவையில் உள்ளவர்கள் ஆகிய பள்ளிப்படிப்பும், பல்கலைக் கழகப் பட்டப்படிப்பும் பதவிப் பெருமைகளும் உடையவர்களான கைதடிகிழக்கு உயர்சாதியினர் என்றுகூறப்படுவோரின் நிர்வாகத்தில் உள்ள இக் கோவிலில் பிராமணர்கள் உட்பட ஏனைய சாதிக்காரர் அடிமைகளாக உள்ளனர்.

உயர்சாதியாரின் சொல்லைக் கேட்டு பிராமணர்கள் பிள்ளையாரைத் தேரில் இருந்து இறக்கினர். அப்படிச் செய்வது கிரியை முறைக்குப் பிழை எனச் சொன்ன பிராமணர் தூக்கி எறிந்து ஏசப்பட்டனர். வடம்பிடித்து இழுக்க முனைந்த தாழ்த்தப்பட்ட

தினர் அடக்கப்பட்டனர், வடம் பிடிக்க விடாது தடுக்கப்பட்டனர்.

வடம் பிடிக்க வேண்டாம் எனத் தாழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் மக்களிடம் கூறிய பொழுது, அவர்கள் தங்கள் நேர்த்திக்கடனைச் செய்யவந்துள்ளதாகக் கூறினர் தம்மைத்தேர்வடம் பிடிக்க விடுமாறு மன்றாடினர், இதயத்தை இறுகிய இரும்பாக்கி, உணர்ச்சிகளை பெட்டியில் பூட்டிவைத்து அநீதியையும், ஆணவத்தையும் தாண்டவமாடவிட்ட உயர்குலத்தினர் என்றுதம்மைக்கூறும்மக்கள் தங்களைத் தவிர வேறுயாரும் தேர் வடம்பிடிக்க விடமாட்டோம் எனக்கூறினர் ஆணவவெறியினால் ஆண்டவனுக்கும் அடியவர்கட்கும் முன்பு அநீதியாக நடந்தனர்.

நீதியாக நடவுங்கள் எல்லோருமாக வடத்தை பிடித்து இழுக்கஅனுமதியுங்கள். ஆண்டவனுக்கு முன்பு அனைவரும் சமமே எனக் கருத்துக் கூறிய பொலிசார் பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. சி

ஞர் பேரவைத் தலைமைச் செயலாளர் திரு. க. சச்சிதானந்தன், கைதடியில் உள்ள சில படித்தவர்கள் ஆகியோர்களின் கருத்துக்களையும் மதிக்காமல், என்ன செய்வது என அறியாது தவித்த நிர்வாகத்தில்உள்ளவர்களையும் மதிக்காமல் சாதிவெறியும் ஆணவவெறியும் நிறைந்து ''சாமியை இறக்கு. தேரை. ஓடவிடாதே'' எனச் சத்தமிட்டுக் கூச்சலிட்டவர்கள் அனைவரும் படித்தவர்கள் பட்டம் பதவி பெற்றவர்கள் இவர்கள் தமது சமூகத்துக்கும். தாம் படித்த கல்விக்கும் பெற்ற பட்டத்துக்கும், வகிக்கும் பதவிக்கும் இழுக்குத் தேடும்வகையில் நடந்து கொண்டனர்.

தாழ்த்தப்பட்ட சமூகமாகக் கருதியவர்கள் படிக்காதவர்கள் எனினும் அடக்கமாக அமைதியாக ஆறுதலாக தொழுதகையும் அழுத கண்ணுமாக நின்றனர், கைதடியில் தடித்த சாதித்தனம் ஒழிந்தால் தான், உண்மையான விடுதலையை தமிழ் மக்கள்

## சுதந்திரன் (வாரமிருமுறை) புதிய சந்தா விபரம்

1-3-79 முதல் சுதந்திரன் உள்ளூர் (தமிழ் ஈழம், சிறீலங்கா) சந்தாவிபரம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| ஓராண்டு சந்தா | — | ரூபா 70.00 |
| அரை ஆண்டு '' | — | ரூபா 35.00 |

அரை ஆண்டுக்கு குறைவான சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. சந்தாத் தொகை காசோலையாகவோ காசுக்கட்டளையாகவோ, 'சுதந்திரன்' என்ற பெயருக்கு எழுதப்பட்டு அனுப்பப்படவேண்டும்.

அனுப்பவேண்டிய முகவரி:
நிர்வாகி சுதந்திரன்
15, மகாத்மாகாந்தி வீதி
யாழ்ப்பாணம்;

படிப்பகம்

www.padippakam.com



## "பயமுறுத்தலால் எம்மை பணியவைக்க முடியாது"

அமைச்சர் ஈ. எல். சேனநாயகா: "தமிழர் கூட்டணியினர் மிகவும் கவனமாகப் பேசவேண்டும். இதை முன்பே கூறியுள்ளேன்.

திரு. அமிர்தலிங்கம்; என்ன? அமைச்சர் எம்மைப் பயமுறுத்துகிறரா?

சேனநாயகா: உங்களது பேச்சுக்களே இனவாதத்தைத் தூண்டின. நான் மீண்டும் சொல்கிறேன். நீங்கள் உங்கள் வாயைக்கட்டுப்படுத்தாவிட்டால், உங்கள் சகோதரர்களேயும் அவர்கள் சுற்றத்தாரையும் எம்மால் பாதுகாக்க முடியாத நிலைமை ஏற்படும்.

அமிர்தலிங்கம்: இப்படியான பயமுறுத்தல்களையெல்லாம் நாம் பல தடவை கேட்டிருக்கிறேம். எதனையும் எதிர்நோக்க நாம் தயாராக இருக்கிறேம். நான் மூன்று வாரங்களுக்குமுன் இச்சபையில் பேசும்போது என்னைத் தாக்க உறுப்பினர் ஒருவர் செருப்பைக் கழற்றித்தயாராக வைத்திருந்ததாக கேள்விப்பட்டேன். இப்படியான செயல்கள் குறித்து நான் அஞ்சவில்லை, உரிமைகளுக்காகப் போராடும்போது எதனையும் தாங்க நாம் தயார்"

— பாராளுமன்றத்தில் (21-5-79)

* * * *

## அமைச்சர் கூறிய பச்சைப் பொய்

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த சிறீலங்காவின் போக்குவரத்து அமைச்சர் எம். எச். முகம்மத் அவர்கள் யாழ் நகரில் தாம் கொண்டுவந்த புழுகுமூட்டைகளிலிருந்து பல தேர்தல் குண்டுகளை எடுத்து எறிந்தார். அதில் ஒன்று 1979ம் ஆண்டுக்கான கல்வியாண்டில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து மருத்துவ பீடத்திற்கு 150 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்பதாகும். அப்பாடா! இது பச்சைப்பொய். ஆக இம்முறை யாழ் மாவட்டத்திலிருந்து மூன்று மருத்துவ பீடங்களுக்கும் தெரிவுபெற்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கை ஆக 60 மட்டுமே! பொறுப்பு வாய்ந்த அமைச்சர் கூறிய பச்சைப் பொய்களில் இதுவே தலையாயது. இனிமேலாவது இவர்கள் திருந்துவார்களா?

* * * *

## தமிழர் விடுதலை உணர்வை புரிந்து கொண்ட பாடகி

அண்மையில் தமிழீழத்திற்கு விஜயம் செய்த தமிழக பின்னணிப் பாடகி எல். ஆர். ஈஸ்வரி ஒரு திரைப்படப் பாடலை பாடும்போது, "நாலு பக்கம் கடல் சூழ்ந்த சிங்கள நாடு தீவு" என்ற வரிகளை பாடியபோது தமிழுணர்வுமிக்க சபையோர் அதை ஆட்சேபித்து குரல் கொடுத்தனர். தமிழீழ மக்களின் விடுதலை உணர்வைப் புரிந்து கொண்ட எல். ஆர். ஈஸ்வரி உடனேயே பாடலை மாற்றி "நாலு பக்கம் கடல் சூழ்ந்த இலங்கை நாடு தீவு" என்று பாடலானர். எழுந்த கரகோஷம் வானைப் பிளந்தது. இது பற்றிப்பின்னர் ஈஸ்வரி குழுவினர் நண்பர்களிடம் கூறும்போது தமிழர்களின் தமிழார்வமும் விடுதலை வேட்கையும் தம்மை மெய்சிலிர்க்க வைத்துவிட்டது என்றுர்களாம். இந்த சம்பவம் வல்வெட்டித்துறையில் நடைபெற்றது.

# திருக்கோணமலை நகரசபை உறுப்பினர் பொலீசாரால் தாக்கப்பட்டதாக புகார்!

திருக்கோணமலை நகரசபைக்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களில் ஒருவரான செபஸ்தியாம்பிள்ளை பட்ரிக் அவருடையவீட்டில் வைத்து பொலிசாரால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டிருக்கிறர், அவர் இது குறித்து திருக்கோணமலை பொலிஸ் அதிபருக்கு புகார் செய்துள்ளார்.

அவர் திருகோணமலை உதவி பொலிஸ் அதிபருக்கு தாம் தாக்கப்பட்டதாக கொடுத்துள்ள புகாரில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"21-5-79 திங்கட்கிழமை இரவு அன்புவழிபுரத்தில் உள்ள எனது வீட்டில் நான் நித்திரை செய்து கொண்டிருந்தபோது; சிவில் உடையணிந்த சில பொலிசார் எனது இல்லத்துக்கு வந்தார்கள். என்னை வீட்டிலிருந்து வெளியே இழுத்துச் சென்றுர்கள். பின்னர் தாக்கினுர்கள். இதே போல அதேயிரவு அப்பகுதியில் வேறு பலரும் தாக்கப்பட்டுள்ளனர்"

அதே நாளன்று காலை அன்புவழிபுரப் பகுதியில் பதட்டநிலை காணப்பட்டதைத் தொடர்ந்து, உப்புவெளி பொலிசாரால் திரு. செபஸ்தியாம்பிள்ளை பட்ரிக்கும், அவரது மனைவியும், மகளும் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்களுடன் மேலும் 10 பேர் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டனர், அதன் பின்னர், திருமதி பட்ரிக்கையும், பட்ரிக்கின் மகளையும் பொலிஸ் காவலில் வைத்துக்கொண்டு, பட்ரிக்கை மட்டும் விடுதலை செய்தனர். அன்று இரவு பொலிசார் வீடு தேடிவந்து திரு. பட்ரிக்கைத் தாக்கியுள்ளனர்.

செய்வாய் (22-5-79) காலை திரு. பட்ரிக் தலைமையில் ஒருகுழுவினர் பொலிஸ் அதிபர் அலுவலகம் சென்று தாம் தாக்கப்பட்டது குறித்து புகார் கொடுத்தனர்.

திருக்கோணமலை நகர சபைத்தலைவர் திரு வெற்றிவேலு சம்பவம் நடந்த பகுதிக்கு சென்றுபார்வையிட்டதுடன், இத்தாக்குதல் குறித்து திருக்கோணமலை அரசாங்க அதிபருக்கும் புகார் செய்துள்ளார்.

# சிங்களத் தகைமை நீக்கும் சுற்று நிருபம் இன்னும் ஏன் செயற்படவில்லை?

பொது நிர்வாக உள்நாட்டமைச்சு 19-1-79ல் அனுப்பிய திறைச்சேரிச்சுற்றறிக்கை எண். 298ன் படி சில குறிப்பிட்ட புதிய ஊழியர்களுக்கு சிங்களமொழித் தகைமையிலிருந்துவிதிவிலக்களிக்கப்பட்டுள்ளது. ஆனுல் தெய்வம் விடைகொடுத்தாலும், பூசாரி விடைகொடாததுபோல அரசாங்கம் சிங்களத்தகைமையிலிருந்துவிதிவிலக்களித்தாலும், பல திணைக்களங்களில் இச்சுற்றறிக்கை ஆறுமாதமாகியும் இதுவரை செயற்படுத்தபடவில்லையென்று தெரியவருகிறது.

உதாரணமாக தகவல் திணைக்களத்தின் கீழ்செயற்படும் இலங்கைப் பத்திரிகைப் பேரவையில் தமிழ் மொழி பெயர்ப்பாளராகக் கடமையாற்றும் தமிழ்ஊழியர் ஒருவருக்கு சிங்களத் தகைமையிலிருந்துவிதிவிலக்களிக்கும் சுற்று நிருபம் அனுப்பப்பட்டு, 6மாதமாகியும் இதுவரை அவரது சம்பள உயர்வுகள் வழங்கப்படவில்லையாம்! இவர் 12.10. 1973ம் ஆண்டிலிருந்து கடந்த 6ஆண்டுகளாக பத்திரிகைப் பேரவையில் தமிழ் மொழிபெயர்ப்பாளராக வேலைசெய்து வருகிறர்.

தமிழ்த்தட்டச்சாளர் ஒருவர் பேரவைக்கு இன்னும் நியமனம் செய்யப்படாமையால், அந்தவேலையையும் மொழிபெயர்ப்பாளராகிய இவரே செய்து வருகிறர்.

தமிழர்களின் மீது அனுதாபம்காட்டும் திரு. ஆனந்த திஸ்ஸ டி. அல்விஸ்சின் ஆதிக்கத்தின் கீழ்வரும் ஒரு நிறுவனத்திலேயே இந்த நிலையென்றல், ஏனைய திணைக்களங்கள் பற்றிக் கேட்கவா வேண்டும்?

சொல்லொன்று— செயலொன்று என்று இரட்டைவேடம் போடுவதுதான தார்மீகம்? அரசின் சுற்றறிக்கையை அமுல்படுத்துமாறு ஜனதிபதி கட்டளையிடுவரா? கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலையில் மனம் நொந்து போயுள்ள தமிழ் ஊழியர்கள் இவ்வாறு கேட்கின்றனர்.

## சிங்கப்பூர் பயணம்

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் நிதிச்செயலாளர் திரு. சி. இரத்தினவடிவேல் அரசாங்க ஊழியர்களின் 3வது அனைத்துலக மாநாட்டில்கலந்து கொள்வதற்காக 21ம் திகதி திங்கட்கிழமை சிங்கப்பூருக்குப் பயணமானுர். அனைத்துலக அரசாங்க சேவைத்தாபனத்தினுல் நடத்தப் பெறும் மேற்படி மாநாடு 22ம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின்றது.

பருத்தித்துறையைப்பிறப்பிடமாகக் கொண்ட திரு. இரத்தினவடிவேல் தற்பொழுதுகொழும்புபொதுத் திறைச்சேரியில் பணிபுரிகின்றுர் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் உதவிச் செயலாளராகவும், இணைச்செயலாளராகவும் முழுநேர அலுவலராகவும் பணிபுரிந்துள்ள இவர், தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியலில் மிக ஈடுபாடு கொண்டவராவர். தமிழர் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நாடாத்தப்பட்ட ட்ரயல் அற் பார் வழக்கில் ஆவணங்கள் தயாரிப்பதற்கும், மற்றும் முக்கிய விடயங்களிலும் பெரும்பங்கு கொண்டு உழைத்தவர். தற்பொழுது தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் சபை உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களவர் குடியேறவேண்டும்

## ஐக்கிய தேசியக் கட்சி பொதுச்செயலாளர் கூறுகிறர்!

தமிழ் ஈழக் கோரிக்கையை— அதாவது தமிழ்த் தேசியஇனத்துக்கோர் தாயகம் வேண்டும் என்றகோரிக்கையை முறியடிப்பதற்காக தமிழ் மக்களைத் தென்னிலங்கையிலும், சிங்கள மக்களை தமிழ்ப்பிரதேசங்களிலும் குடியேற்றுவதே ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் கொள்கை என்பதை ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன ஏற்கனவே கூறியிருக்கிறர்.

இந்த தமிழ் இனஒழிப்புக் கொள்கையை ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் திரு. ஹர்ஷாஅபேவர்த்தன [illegible] மூலம் மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறர்.

"இன ஐக்கியத்தை" ஏற்படுத்துவதற்காக சிங்களமக்கள் தமிழ்ப்பிரதேசங்களில்குடியேற வேண்டும்; குடியேற்றத்திட்டங்களின் மூலமே இனஐக்கியத்தை ஏற்படுத்த ஐ. தே. கட்சி முயற்சிக்கிறது" என்று அவர் தெட்டத்தெளிவாகக் கூறியுள்ளார்.

ஐக்கியதேசியக் கட்சியின் இக் குடியேற்றக்கொள்கை தமிழினை ஒழிப்புக் கொள்கையேதவிர—இன ஐக்கியத்துக்கான கொள்கையன்று தவளையை விழுங்கி ஜீரணிப்பதன் மூலம், பாம்பு எப்படி [illegible] மிடையே "ஒற்றுமையை" ஏற்படுத்துகிறதோ— அதேபோல சிங்களப்பெரும்பான்மை இனத்துக்குள் தமிழினத்தை சங்கமிக்கவைப்பதையே ஐ. தே. கட்சி ஐக்கியம். தேசியம் என்று கூறுகிறது.

தன்னை விழுங்க வரும் ஐக்கிய தேசியக்கட்சி எனும் பாம்புக்கும் உள்ளூராட்சி மன்றத்தேர்தலிலே வாக்களித்தார்களே சில தவளைத்தமிழர்கள்; அவர்களை என்ன சொல்வது?

தான் சாவதற்கு தானே நஞ்சருந்தும் சில சிந்தனையற்ற தமிழர்களை எப்படித் திருத்துவது?

www.padippakam.com



# சிவகுமாரன் சிலையைத் தகர்த்தவர்கள் வடக்கிலுள்ளவர்கள் தானும்!

## 'லங்காதீப' இனவெறி கக்குகிறது!

யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னுண்டோவின் அழைப்பின்பேரில் அரசாங்கத்தின் செலவில் அண்மையில் வடமாகாணத்துக்கு வந்து குடித்துக் கும்மாளமிட்டு விட்டுச்சென்ற தென்னிலங்கைப் பத்திரிகையாளர்கள் தெற்கே சென்றபின்னர் தமது இயற்கையான இனவெறியைக் கக்கத் தொடங்கிவிட்டார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்னிலங்கையில் பிரசாரம் செய்யப்படுவது போல—எந்தவிதமான பயங்கரவாதமும் நிலவவில்லையென்பதை நேரடியாக தென்னிலங்கைப்பத்திரிகையாளர்களுக்கு காட்டுவதற்காகவே அரசாங்க அதிபர் அவர்களை இங்கே அழைத்திருந்தார். ஆனல் அவர் நினைத்தது ஒன்று, நடந்தது வேருகிவிட்டது: பிள்ளையார் பிடிக்க, குரங்காய் முடிந்த கதையாகிவிட்டது. உண்மை நிலையை எடுத்துக் கூறுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட தென்னிலங்கைப் பத்திரிகையாளர்கள், இனவெறியை கிளப்புவதிலே தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

தமிழர் நெஞ்செலாம் நிறைந்திருக்கும் தியாகி சிவகுமாரனுடைய சிலையை 1977 கலவரத்தின்போது இனவெறிபிடித்த ஆயுதப் படைகளே உடைத்து தலைகீழாகத் தொங்கவிட்டன என்பது ஊரறிந்த விடயம்; அதை மூடிமறைத்து. சிவகுமாரனின் சிலையை ஏதோ அவன்மீது கோபம்கொண்ட தமிழ் மக்களில் ஒரு பிரிவினரே உடைத்தெறிந்த தாக குணசேனுப்பத்திரிகை நிறுவனத்திலிருந்து வெளிவரும் ஆங்கில வார ஏடான 'வீக் எண்ட்' எழுதியிருந்தது வாசகர்கள்அறிந்ததே.

இதே போல 'டைம்ஸ் குறூப்'பைச் சேர்ந்த சிங்களப் பத்திரிகையான 'லங்கா தீப'வும் இனவாதத்தைக் கக்கியுள்ளது. 20-3-79 'லங்கா தீப' வில் வெளியிடப்பட்டுள்ள இனவாதக் கட்டுரையைச்சாடி "தொழிலாளர் பாதை" (ஏப்ரல்1, 1979) எழுதியுள்ளதை கீழே தருகிறோம்.

முதலாளித்துவப் பத்திரிகைகள் பொலிஸ், இராணுவம், கடற்படை ஆகியவற்றின் பயங்கரவாதத்தை மூடி மறைப்பதற்காகவும், அவற்றிற்கு நியாயம் கற்பிக்கவும் வகுப்பு வாதத்தை நாடு பூராகவும் மூட்டிவிடும் முயற்சியில் இன்று தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன: "ரைம்ஸ் நிறுவனத்தால்" பிரசுரிக்கப்பட்டு வரும் "லங்கா தீப" மார்ச் 20ம் திகதிய இதழின் முன் பக்கத்தில் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இதில் சிவகுமாரனின் சிதைக்கப்பட்ட சிலையின் பெரிய படம் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது, இப்படத்தின்கீழ் இந்த இனவெறியர்கள் எழுதியுள்ளதன் தமிழாக்கம் இதோ,

'லங்கா தீப'

"வங்கிக்கொள்ளை உட்பட ஐந்து குற்றங்களைச் செய்தான் என்று குற்றம் சுமத்தப்பட்டவடக்கைச்சேர்ந்த இளைஞனுகிய சிவகுமாரன் தற்கொலை செய்துகொண்டான்" தற்கொலைசெய்து கொண்ட சிவகுமாரனுக்குத் தமிழர் விடுதலைக்கூட்டணியினர் சிலை ஒன்றை எழுப்பியதோடு, அது சம்பந்தமாகப் பகிரங்கக் கூட்டம் ஒன்றையும் நடாத்தினுர்கள், தேசிய வீரர்களுக்கு சிலை எழுப்புவதற்குப் பதிலாகக் குற்றம் செய்த இளைஞன் ஒருவனுக்கு சிலை எழுப்பியதையிட்டு வடக்கிலுள்ள வேறுபகுதியினர் அதிருப்தியடைந்துள்ளனர். இவர்களால் இச்சிலை தகர்க்கப்பட்டுள்ளது. இப்படித்தகர்க்கப்பட்ட சிலையை நீங்கள் இப்படத்தில் பார்க்கலாம்'.

இப்படிக்கூறி 1977ம்ஆண்டில் ஆகஸ்ட் இனக்கலவரக் காலத்தில் பொலிஸ் படையினரும், இராணுவத்தினரும் கூட்டாகச் சேர்ந்து உடைத்த சிவகுமாரனின் சிலை தலைகீழாகத் தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது எடுத்த படத்தைப் பிரசுரித்துள்ளார்கள்.

தமிழ் மக்கள் அணியில் சிவகுமாரனின் சிலையை தகர்க்கக் கனவிற் தன்னும் எண்ணக்கூடிய ஈனப்பிறவிகள் இருக்க முடியும் என்று "லங்காதிப"வின் இனவெறிச் சதிகாரர்களால் மட்டும்தான் கூறமுடியும்.

சிவகுமாரன்ஜூன்5. 1974 இல் இறந்தான். ஒரு வருடத்தின் பின்ஜூன்5, 1975ல் தமிழ் மக்கள், சிவகுமாரனுக்கு அவனது ஊராகிய உரும்பிராயில் சிலை எழுப்பினுர்கள். இச்சிலை தமிழ் மக்களுக்கு எதிராக இனக்கலவரத்தை வழிநடத்திய காக்கிச்சட்டைக் குண்டர்கள் சிவகுமாரனின் சிலையுடன் வள்ளுவரின் சிலையையும், ஔவைப்பிராட்டியாரின் சிலையையும், சோமசுந்தரப் புலவரின் சிலையையும் சிதைத்தார்கள் என்பதை உலகம் அறியும்.

சிவகுமாரனின் சிலையை உடைத்தது வடக்கில் வாழும் 'வேறு பகுதியினர்' என்று லங்காதீப கூறுகின்றது, இதை எழுதியவர்கள் யார்? என்பதை மட்டும் கூறவில்லை, ஏன்? அப்படிக் கூறினுல் சிறுபடையில் இருக்கும் இனவெறிக் குண்டர்கள் என்று கூறவேண்டிய நிலை நிலவுவதாலா? லங்காதீபவின் இனவெறிச்சதியாளர்கள் சிலை உடைபட்ட ஆண்டைக் குறிப்பிடாது விடுவதன் மூலம் இச்சம்பவம் அண்மையில் நடந்தது எனக்காட்ட முயற்சித்துள்ளார்கள்;

அத்தோடு அவர்கள் வள்ளுவரின் சிலையும், ஔவையாரின் சிலையும், சிவகுமாரனின் சிலையுடன் தகர்க்கப்பட்டன என்பதை மூடிமறைப்பதன் மூலம் இச்சிலைகளை உடைத்து மிலேச்சர்களின் உண்மை அடையாளங்களை மூடிமறைக்க முயற்சிக்கின்றுர்கள்.

முதலாளித்துவ இராணுவமும், பொலிசும் அவற்றினுல் சம்பளத்திற்காக வழிநடப்படும் குண்டர் கோஷ்டிகளும் செய்யும்குற்றங்களை மற்றவர்கள் செய்துள்ளார்கள் என்று எடுத்து நிரூபிப்பதற்கு லங்காதீபவில் கூலிக்கு மாரடிப்பவர்கள் முயற்சிக்கின்றுர்கள், யாழ்ப்பாணத்தில் மக்கள் சகலரினதும் ஏகோபித்த எதிர்ப்பு பொலிஸ், இராணுவம் ஆகிய படைகளுக்கு இருந்து வருகின்றது.

நிலைமை இப்படி இருக்கும் பொழுது வடக்கில் பெரும் அன்பைப்பெற்ற வீரன் ஒருவனின் சிலையை உடைக்கக் கூடியவர்கள் அப்பிரதேச மக்கள் மத்தியில் வாழுகின்றுர்கள் என்று லங்காதிப கூற முயற்சிப்பது எவ்விதத்திலும் தற்செயலானதல்ல,

இச்"செய்தியின்" பின்னணியில் பொலீஸ்படையினர் இராணுவத்தினர், திரைமறைவில் செயற்படும் சதியாளர்கள், ஆத்திர மூட்டாளர்கள்ஆகியோர் இருக்கின்றுர்கள்,இவர்கள் போராளிகளைக் கொன்று குவிக்கவும், அதன்பின் இக்கொலைகள் "வேறு பகுதினரால் நடத்தப்பட்டது" என்றுகூறவும் திட்டவட்டமான தீர்மானத்தை எடுத்துள்ளார்கள் என்பதும் இவற்றின் பின்னணியில்சர்வதேச சதியாளர்களின் கை இருக்கின்றது என்பதும் நன்கு தெளிவு. இவைசம்பந்தமாக எல்லோரையும் நாம்முன் கூட்டியே எச்சரித்து வைக்க விரும்புகின்றேம்!

---

—1-ம் பக்கத் தொடர்

லாளர் நாவலர் நெடுஞ்செழியன்' மற்றும்அக்கட்சியிலுள்ள கே. இராசாராம். டாக்டர் இரா. சஞர்த்தனம் ராஜாமுகம்மது பண்ருட்டி ராமச்சந்திரன், மதுரைமுத்து, போன்ற பலர் ஈழத்தமிழர் பிரச்சினையை நன்கு அறிந்தவர்கள், அண்ணுதிமுகவுடன் உறவுகொண்டுள்ள சிலம்புச்செல்வர் திரு.ம.பொ.சி. அவர்களே தமிழ் நாடு மேலவையின் தலைவராக இருக்கிருர்.இவர் ஈழத்தமிழர் பிரச்சினையை அடியிலிருந்து நுனிவரை நன்கு அறிந்தவர்.

இதேபோலவே எதிர்க்கட்சித்தலைவர் கலைஞர் கருணுநிதி அவர்களும்,திராவிட முன்னேற்றக்கழகமும் எப்பொழுதும் ஈழத் தமிழர் பிரச்சினைக்காக குரல் கொடுத்து, இயக்கம்நடத்தி வருபவர்கள், தமிழ் நாடு கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர்களும் ஈழத்தமிழர் பிரச்சினையின்பால் அனுதாபம் கொண்டுள்ளனர்.

இத்தகையதொரு அருமையான சூழ்நிலையில்— அமெரிக்க மசசூசெட் மாநில பாராளுமன்றத்தைப் பின்பற்றி— ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்படும் பல்வேறு அநீதிகளைச் சுட்டிக்காட்டி இந்த அநீதியை துடைத்து ஈழத்தமிழர்களுக்கு நியாயம் பெற்றுக்கொடுப்பதற்கு இந்தியப் பிரதமரும், இந்திய அரசும் இலங்கையுடன் தாம் கொண்டிருக்கும் செல்வாக்கையும், நல்லெண்ணத்தையும் பயன்படுத்த வேண்டும் என்று கோரும் ஓர் தீர்மானத்தை தமிழ் நாட்டின் இருசபைகளிலும் ஏகமனதாக நிறைவேற்றுவதற்கு தமிழ் நாட்டிலுள்ள தமிழீழ விடுதலை அனுதாபிகள் முயற்சி

---

## யோகேஸ்வரன் வெளிநாடு பயணம்

யாழ் மாநகரசபைத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியைப் படுதோல்வியடையச் செய்து தமிழினத்தின் தன்மானத்தைக்காத்த கூட்டணியின் யாழ்ப்பாண உறுப்பினர் திரு.வெ, யோகேஸ்வரன் அவர்கள் 26,5.79ல் வெளிநாடு பயணமாஞர். இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகியநாடுகளில் சுமார் மூன்றுவாரகாலம் சுற்றுப்பயணம்செய்யும் யாழ் பா,உ. தமிழீழ விடுதலைக் கோரிக்கைக்கு ஆதரவுதிரட்டுவதிலும், தமிழினத்தின் நிலையை எடுத்து விளக்குவதிலும், இந்த வாய்ப்பைப் பயன்படுத்துவார், புத்தளம் பள்ளி வாசலில் இஸ்லாமிய சகோதரர்கள் சுட்டுக்கொல்லப்பட்டது பற்றியும் அவர் அங்கு எடுத்துரைப்பார். சிங்கப்பூர் வெளிநாட்டமைச்சர் திரு. இராஜரத்தினத்தையும் திரு. யோகேஸ்வரன் சந்தித்துப் பேசுவார். யூன் 20ம் திகதி நாடு திரும்புவார்.

---

## கைதடி சமூகப் பிரச்னையில் சமரசம்

கைதடியில் ஊர்கோவில் திருவிழாவின் போதுஎழுந்த சமூகப்பிரச்சினை, சாவகச்சேரி பா.உ. திரு.வி.என். நவரத்தினம் அவர்களின் தலையீட்டினுல் சமரசமாகத் தீர்க்கப்பட்டுள்ளது. இரு சமூகங்களையும்உள்ளடக்கிய ஒரு மாநாட்டைக் கூட்டி, சமாதானம் செய்துவைத்த திரு.நவரத்தினம் இதற்காக ஒரு சமாதான சபையையும் ஏற்படுத்தியுள்ளார்.

---

## சர்வதேச கல்வி நிறுவனங்களுக்கு தமிழ் மாணவர் சார்பில் வேண்டுகோள்

பல்கலைக்கழகக் கல்வியில் தரப்படுத்தலை அகற்றுவோம் என்று வாக்குறுதி கொடுத்து பதவிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனுவின் அரசாங்கம், கொள்கையிலிருந்துபிறழ்ந்து "முற்றிலும் திறமை அடிப்படையிலேயே கல்வி" எனும்சர்வதேச நெறிமுறையைமீறி, தரப்படுத்தலிலும் மோசமான புதிய பல்கலைக்கழக அனுமதி முறையை புகுத்தியுள்ளமை உலக அரங்கில் அம்பலப் படுத்தப்பட்டுள்ளது;

உலககல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசுகள் அனைவருக்கும் ஜே.ஆர் அரசின்பற்றும் பல்கலைக்கழக அனுமதி முறையின் பாரபட்சமான நிலையை விளக்கும் கடிதங்களை லண்டனிலிருந்து திரு. அமிர்தலிங்கம் காண்டீபன் அனுப்பிவைத்துள்ளார்.

இதற்கு ஆதாரமாகஅவர், இலங்கைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 37 ஆசிரியர்களால் ஒப்பமிடப்பட்டு. 1978டிசெம்பர் 7ந்திகதி வெளியிடப்பட்ட பிரசுரத்தையும் (Overmarking—allegations and attitudes) தமிழ் மாணவர் பேரவையின் சார்பில் ஜனதிபதி ஜே. ஆருக்கு பல புள்ளிவிபரங்களைக் கொண்ட பகிரங்கக் கடிதத்தையும் இணைத்து அனுப்பியுள்ளார்.

சர்வதேசமாணவர் அணிகளையும் சர்வதேச கல்விநிறுவனங்களையும் இலங்கைத் தமிழ் மாணவர்களின் நீதியான போராட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறும் வேண்டுகோள்விடப்பட்டுள்ளது.

---

## வாராந்தக் கருத்தரங்கு

காலம்— 3-6-79 ஞாயிறு மாலை 6.00 மணி.

இடம்— தமிழர்விடுதலைக் கூட்டணிச் செயலகம்;

தலைப்பு— "தமிழன் உயர்வுக்காகத் தலைபோவதென்ருலும்தயங்காததம்பி —சிங்கத் தமிழன் சிவகுமாரன்

தலைவர்— முன்னுள்யாழ் முதல்வர் டாக்டர் சு. அ. தருமலிங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள் உரை நிகழ்த்துவர்

---

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேரபர்ஸ் லிமிட்டட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1979ம் ஆண்டு மே மாதம்